1982 மார்ச் 12]

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய அந்த ஃபேக்ட்ஸ் களைப் பொறுத்த வரையில் சந்தோஷம். ஆனால், ஜனவரி மாதத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதி இருப் பதாகக் கூறினார்கள். அரிசி, கோதுமை போன்றவற்றில் தேவையைப் பற்றிக் கூட கடிதம் எழுதியும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்று அவர்கள் சொல்லி இருக்கிறார் கள். அதேபோன்று இன்டஸ்ட்ரீஸ் சம்பந்தமாக மத்திய அர சுக்கு எழுதியும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்று இன்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரும் சொல்லி இருக்கிறார். ஆகவே கடிதம் எழுதுவதைப் பொறுத்தவரையிலே பிரயோஜனம் இல்லா மல் இருக்கின்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்களே நேராகப் போய் பிரதம அமைச்சர் அவர்களிடம் சொல்லி ஏற்பாடுகள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய மின்சார ரயில் பாதைத் திட்டம் நிச்சயமாக வரும் என்று அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதைப்போலவே மதுரை நகரத்தைச் சுற்றி, சர்க்குலர் மின் ரயில் திட்டம் அமைப் பதற்கு மத்திய அரசிடம் இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக்கேள்வி போடு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவரம்பூர் பகுதியில் E.S.I. மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 452—திரு. எம். அண்ணாதாசன் : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவரம்பூர் பகுதியில் E.S.I. மருத்துவமனை நிறுவ இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அம் மருத்துவமனை கட்டிடங்கள் எப் போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) திருவரம்பூர் பகுதியில் இ. எஸ். ஐ. மருந்தகம் கட்ட இடம் முதல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தை கூட்டு ஆய்வுக்குழு (Joint Insrec'i n Te m) பார்வையிட்டு ஒப்புதல் அளித்த பின்பு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 453, 454, 455, 456 ஆகியவை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

ஸ்பிக் உரத் தொழிற்சாலைக்கான மானியம்.

*வினா எண் 457—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரசாயன உர விலைகள் மலிவாக இருக்க வேண்டுமென்பதற்காக தூத்துக்குடியிலுள்ள ஸ்பிக் உரத்தொழிற்சாலைக்கு மத்திய அரசு மானியமாக நிதி கொடுத்துள்ளதா—

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு எவ்வளவு தொகை கொடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ)

வருடம்.	ரூபாய் கோடியில்.
1978–79—(ஜூலை 1978 முதல் ஜூன் 1979 வரை).	18·46
1979–80—(ஜூலை 1979 முதல் ஜூன் 1980 வரை).	27·93
1980–81—(ஜூலை 1980 முதல் ஜூன் 1981 வரை).	8·47